நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 104/2020

## P.W. 7 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி / புகார்தாரர் தரப்பு / குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு / நீதிமன்ற சாட்சி)**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | சிவராஜ் |
| தந்தை / கணவர் பெயர் | : | மாதேஸ் |
| கிராமம் | : | காவேரிகிராஸ் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 7** |
| வயது | : | 32 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், ஜுன் மாதம், 9–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர் அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.50PM)

1. நான் தற்போது காவேரி கிராஸ் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1. என்னுடைய மாமா, ஆஜர் எதிரிகள் என்னுடைய உறவினர்கள். அ.சா.1 குடும்பத்தாருக்கும் எதிரிகள் குடும்பத்தாருக்கும் வழி தட பிரச்சினை இருந்து வருகிறது. 03.11.2019 ம் தேதி மாலை 6.30 மணி அளவில்

அ.சா.1 பிரச்சினையில் இருநத் தடத்தில் எதிரிகள் குடும்பத்தார் போட்டு வைத்த இருந்த முள்ளை எடுத்துவிட்டு நடந்து சென்றதால் எதிரி மோகன்ராஜ் அ.சா1 யை தேவடியா பையா என்று திட்டினார்.

2. எதிரி சேகரின் இளைய மகன் ரமேஷ் சாமிதுரையின் மகன் ராமன் இருவரும் அ.சா 1யை கல்லால் தாக்கினார்கள் . எதிரி சேகர் இரண்டு கைகளால் அ.சா.1யை குத்தினார். அருகில் இருந்த அ.சா 1ன் தம்பி மணிவண்ணனை ரமேஷ் கல்லால் தலையில் குத்தினார். எதிரி மோகன்ராஜ் அங்கிருந்த தேக்சாவால் மணவண்னின் தலையில் அடித்தார். எதிர்கள் ரமேஷ், மற்றும் மோகன்ராஜ் இருவரும் கல்லை அங்கேயே போட்டு விட்டு இன்றைக்கு தப்பித்து வீட்டீர்கள் என்றைக்கு, இருந்தாலும் கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டினார்கள்.

3. காயம் பட்ட தங்கராஜ் மற்றும் மணிவண்னனை நானும் கார்த்திக் என்பவரும் இரண்டு இருசக்கர வாகனத்தில் மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்தோம். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக சேலம் அனுப்பி வைத்தார்கள். இருவரையிம் சேலம் அரசு மருத்துவமனையில் சேர்த்தோம். அ.சா.1 மற்றும் 2 இருவரையும் அடித்தவர்களின் பார்த்தால் என்னால் சொல்ல முடியும். இன்று எதிரிகள் சேகர் மற்றும் மோகன்ராஜ் ஆஜாகியுள்ளனர் மற்ற எதிரிகளை பார்த்தால் என்னால் சொல்ல முடியும். அவர்கள் இன்று நீதிமனறத்தில் ஆஜராகவில்லை. போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. காவல் துறையில் விசாரணையில் நான் மேல் சொன்ன விவரங்களைத்தான் சொன்னேன். என்னை போலீசார் என்னை 06.11.2019 மற்றும் 07.11.2019ல் என்னை விசாரித்தனர். அ.சா.2 மணிவண்ணன் எனது சகோதரியின் கணவர். அ.சா.1 தங்கராஜ் மணிவண்ணின் சகோதரர் என்றால் சரிதான். காவல் துறையில் விசாரணையில் மேற்படி எனது உறவுமுறையயை சொன்னேன். 1ம் எதிரி மோகன் ராஜ் 2012ம் வருடம் முதல் 2024 வரை இரண்டு முறை தொடர்ந்து எங்களது பகுதியான 6 ஆது வார்டில் கவுன் சிலராக இருந்தார். 2ம் எதிரி ரமேஷ் காவல் துறையில் பணிபுரிந்து வருகிறார் என்றால் சரிதான். எனது விவசாய

நிலத்திற்கும் சம்பவ இடத்திற்கும் சுமார் 1 கிலோ மீட்டர் தூரம் இருக்கும்.

2. அந்த விவசாய நிலத்தில் நான் குடியிருக்க வில்லை காவேரி கிராஸில் தனியாக நான் குடியிருந்து வருகிறேன் விவசாய நிலத்தில் எனது பெற்றோர்கள் தான் குடி இருக்கிறார்கள் நான் குடியிருக்கும் வீட்டிற்கும் சம்பவ இடத்திற்கும் சுமார் 200 மீட்டர் தூரம் இருக்கும், வெவ்வேறு வீதியில் உள்ளது. காவேரி கிராஸ் பொங்கி அண்ணன் வீதியில் ஐந்து வீதிகள் உள்ளது என்றாலும் ஐந்திலும் ஆக்கிரமிப்புகள் உள்ளது என்றாலும் சரிதான். எனது அப்பா எனது வீடு அமைந்துள்ள வீதியில் உள்ள இடம் தனது என மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வருவாய்த்துறை மீது மட்டுமே வழக்கு தாக்கல் செய்து உத்தரவாகியுள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கில் வட்டார வளர்ச்சி அலுவலரையோ கவுன்சிலரையோ பஞ்சாயத்து தலைவரையோ தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். ஆஜர் முதல் எதிரி மோகன்ராஜ் என்பவர் தான் வட்டார வளர்ச்சி அலுவலர் மூலமாக மேற்படி ஐந்து வீடுகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற முயற்சி செய்தார் என்றாலும் அவர்தான் வட்டார வளர்ச்சி அலுவலர் நாங்கள் செய்த ஆக்கிரமிப்பையும் அகற்ற அழைத்து வந்தார் என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது. வட்டார வளர்ச்சி அலுவலர் ஆக்கிரமிப்பு அகற்ற வந்தார் என்றால் சரிதான். மேற்படி எனது அப்பா பெற்ற உத்தரவுக்கு எதிராக ஊர் பொதுமக்கள் மேல்முறையீடு செய்துள்ளார்கள் என்றால் சரிதான்.

3. எங்கள் ஊரில் மாரியம்மன் கோவில் உள்ளது என்றால் சரிதான். அந்த கோவில் சம்பந்தமாக எங்களுக்கும் எதிரிகளுக்கும் கோவில் நிர்வாகிகளுக்கும் சுமார் 15 ஆண்டுகளாக பிரச்சனை இருந்து வருகிறது என்றால் சரிதான் நாங்கள் கோயில் விவகாரத்தில் தலையிடுவதில்லை. விலகி இருந்து வருகிறோம். கோவில் கும்பாபிஷேகத்தின் போது நாங்களும் எதிரி தரப்பினரும் மேட்டூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். அந்த புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பாதை ஆக்கிரமிப்பு தொடர்பாக இரு தரப்பினரையும் வருவாய் கோட்டாட்சியர் அழைத்து விசாரணை செய்தார்கள் என்றால் சரியல்ல. தங்கராஜ் தரப்பினரை தான் அழைத்து விசாரணை செய்தார்கள். எங்களை விசாரிக்கவில்லை.

4. தங்கராஜுக்கும் சேகருக்கும் பொது தடம் தொடர்பாக பிரச்சனை உள்ளது என்று நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தங்கராஜ் வீட்டுக்கு செல்ல இரண்டு வழிகள் உள்ளது என்றால் சரிதான். தங்கராஜ் வீட்டுக்கு பின்புறமாக கிழக்கு மேற்காக ஒரு வீதி செல்கிறது என்றால் தெரியாது. சேகர் வீட்டுக்கு கிழக்கு புறம் மாது என்பவரின் விவசாய நிலம் உள்ளது என்றால் சரியல்ல. விவசாய நிலம் இல்லை முள்ளுக்காடு தான் உள்ளது. அது மாதுக்கு சொந்தமான பட்டா நிலம் என்றால் சரிதான் சும்மா காலியிடமாக உள்ளது. முள்ளுக்காட்டை ஒட்டி மாது தற்போது காம்பவுண்ட் சுவர் கட்டிக் கொண்டுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. தங்கராஜ் வீட்டிற்கு மேற்கு புறம் ஒரு கரடு உள்ளது என்றால் சரிதான். நான் சொன்ன முள்ளுக்காடு சேகர் வீட்டை ஒட்டி தான் உள்ளது என்றால் சரிதான். அந்த முள்ளுக்காட்டை கழிப்பிடமாக பயன்படுத்தினால் சேகர் அந்த வீட்டில் குடியிருக்கவே முடியாது என்றால் சரியல்ல, அந்த காடு சுமார் 4 ஏக்கர் உள்ளது.
5. நான் சொல்வது போல் சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், நான் சம்பவ இடத்திலேயே இல்லை என்றாலும் என்னுடைய அப்பா ஆக்கிரமிப்பு செய்ததை எதிர்த்து எதிரி மனு கொடுத்ததால் எனது மாமாவை வைத்து இந்த பொய் புகாரை எனது அப்பா மாதேஷ் கொடுத்துள்ளார் என்றாலும் எனது மாமா கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல,

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–01.25PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்**